Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 223/2024** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **சூரியநாராயணன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை 05.05.2026**

**முதல் விசாரணை**:

1. நான் பாளையம்பட்டியில் குடியிருந்து பரமக்குடி செம்மலான்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறேன். எனது வீட்டில் இருந்து நான் தினமும் வேலைக்கு செல்லும்போது காலை சுமார் 08.00 மணியளவில் என்னுடைய இருசக்கர வாகனத்தை அருப்புக்கோட்டையில் உள்ள இந்நீதிமன்றத்திற்கு எதிரே உள்ள பெந்தயகோஸ் சபைக்கு முன்பாக நிறுத்திவிட்டு நண்பர்களுடன் வேறு காரில் செல்வேன். அதேபோல் 07.10.2024 ம் தேதி எனக்கு சொந்தமான TN 67 AF 5230 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை காலை 08.00 மணியளவில் நிறுத்திவிட்டு வேலைக்கு சென்றுவிட்டேன்.

2. பின்னர் அன்று மாலை 05.00 மணியளவில் வேலையை முடித்துவிட்டு அருப்புக்கோட்டை வந்து பார்த்தபோது நிறுத்தியிருந்த இடத்தில் எனது வாகனத்தை காணவில்லை. அன்று அருகில் உள்ள இடத்தில் தேடி பார்த்தும் எனது வாகனம் கிடைக்காததால் மறுநாள் காலை 09.30 மணியளவில் அருப்புக்கோட்டை நகர் காவல்நிலையத்திற்கு சென்று மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்தேன். தற்போது

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் அன்றைய தினம் 08.10.2024 ம் தேதி மாலையிலேயே எனது வாகனத்தை கண்டுபிடித்துவிட்டதாக காவல் நிலையத்திலிருந்து எனக்கு தகவல் கொடுத்தார்கள். நான் காவல் நிலையத்திற்கு சென்று எனது வாகனத்தை அடையாளம் காண்பித்தேன். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து எனது வாகனத்தை இடைகாலமாக பெற்று சென்றேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் தான் என்னிடமிருந்து திருடு போன வாகனம் ஆகும். **(TN 67 AF 5230 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை காண்பிக்கும் புகைப்படம் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எத்தனை முறை விசாரணை செய்தார்கள் என்றால் புகார் கொடுத்த சமயத்திலும், எனது வண்டியை பெற்ற சமயத்திலும், என்னை விசாரணை செய்தார்கள். நான் எனது வண்டி காணாமல் போன உடனேயே அவசர எண் 100 க்கு போன் செய்து தகவல் தெரிவித்தேனா என்றால் இல்லை, மறுநாள் தான் தேடி பார்த்துவிட்டு காலை 09.00 மணியளவில் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் வண்டியை தவிர்த்து என்னிடம் வேறு நபர்களை காண்பிக்கவில்லை என்றால் சரிதான். யாரிடம் இருந்து எனது வண்டி கைப்பற்ற பட்டது என்ற விவரத்தை போலீசார் என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். சொன்ன நாள், தேதி, நேரத்தில் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மறதியில் எனது வாகனத்தை எங்கோ நிறுத்திவிட்டு, எனது வாகனம் காணாமல் போய்விட்டது என்று காவல் நிலையத்தில் புகார்கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. உண்மையில் எனது வாகனம் திருடு போகவில்லை என்ற காரணத்தினால் தான், யாரிடம் இருந்து எனது வாகனம் கைப்பற்றப்பட்டது என்று போலீசார் என்னிடம் கூறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**